## அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், சமயபுரம், திருச்சி மாவட்டம்

## திருக்கோயிலில் தனியார் காவல் பணிக்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

**( இரண்டு உறை முறையில்)**

**ந.க.எண். 316/1427/அ2 நாள் 28.12.2017**

திருச்சி மாவட்டம், சமயபுரம், அருள்மிகு மாரியம்மன் திருக்கோயிலில் 01.02.2018 முதல் 31.01.2021 முடிய மூன்றாண்டுகளுக்கு (ஆணையர் அனுமதி வழங்கும் நாள் முதல் மூன்றாண்டுகளுக்கு) திருக்கோயிலில் காவல் பணியினை 83 காவலர்களைக் கொண்டு கீழ்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு ஒப்பந்த அடிப்படையில் செய்து கொடுக்க தகுதி வாய்ந்த தனியார் பாதுகாப்பு நிறுவனங்களிலிருந்து இரு உறைகள் முறையில் கீழ்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

| | | | |
|---|---|---|---|
| 1. | ஒப்பந்தப்புள்ளி படிவம் விலை | .. | ரூ. 1000/- (திரும்ப பெறத்தக்கதல்ல) |
| 2 | ஒப்பந்தப்புள்ளி டெபாசிட் தொகை | .. | ரூ. 5,00,000/- ( ரூபாய் ஐந்து இலட்சம்) |
| 3 | ஒப்பந்தப்புள்ளி படிவம் வழங்கும் நாள் | .. | 09.01.2018 முதல் 11.01.2018 முடிய மாலை 5.00 மணி வரை |
| 4 | பூர்த்தி செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளி கொடுக்க கடைசி தேதி | .. | 12.01.2018 முற்பகல் 11.00 மணி |
| 5 | ஒப்பந்தபுள்ளி திறக்கப்படும் நாள் | .. | 12.01.2018 நண்பகல் 12.00 மணி |
| 6 | ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும் இடம் | .. | திருக்கோயில் மாரியம்மன் மண்டபம் (பெருந்திட்ட வளாகம்) |

## நிபந்தனைகள்

1. திருச்சிராப்பள்ளி மாவட்டம் , சமயபுரம் அருள்மிகு மாரியம்மன் திருக்கோயிலில் காவல் பணியினை 83 காவலர்களைக் கொண்டு ஒப்பந்த அடிப்படையில் செய்து கொடுக்க தமிழக அரசால் தமிழ்நாடு தனியார் பாதுகாப்புச் சட்டப்படி பதிவு செய்யப்பட்ட தனியார் பாதுகாப்பு நிறுவனங்களிலிருந்து ஒப்பந்தபுள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

2. ஒப்பந்தப்புள்ளி படிவத்தினை திருக்கோயில் அலுவலகத்தில் ரூ. 1000/– (ரூபாய் ஒரு ஆயிரம் மட்டும்) செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

3. ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்பவர்கள் ரூ.5,00,000/-(ரூபாய் ஐந்து இலட்சம்) டெபாசிட் தொகையினை இந்தியன் ஒவர்சீஸ் வங்கி, சமயபுரம் கிளையில், மாற்றத்தக்க வகையில், “இணைஆணையர்/செயல் அலுவலர், அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், சமயபுரம்” என்ற பெயரில் வங்கி வரைவோலை/ வங்கி காசோலை எடுத்து, முதல் உறை டெண்டருடன் இணைத்து கொடுக்க வேண்டும். எக்காரணம் கொண்டும் டெபாசிட் தொகை ரொக்கமாக ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

4. ஒப்பந்தப்புள்ளி படிவத்தில், ஒப்பந்தப்புள்ளி தொகையை, GST தொகையுடன் சேர்த்து எண்ணாலும், எழுத்தாலும் அடித்தல் திருத்தல் இன்றி தெளிவாக குறிப்பிட்டு கையொப்பம் இட்டு அதற்குரிய ஒப்பந்தப்புள்ளி பெட்டியில் செலுத்த வேண்டும்.

5. இந்து மதத்தை சார்ந்தவர்கள் மட்டுமே டெண்டர்கள் அளிக்க தகுதி வாய்ந்தவர்கள்

6. திருக்கோயிலுக்கு பாக்கி செலுத்த வேண்டியவர்கள், வழக்கு நடவடிக்கையில் ஈடுபட்டவர்கள் திருக்கோயில் நலனுக்கு எதிராக செயல்பட்டவர்கள், குற்றவியல் நீதிமன்றத்தில் தண்டனை அடைந்தவர்கள் ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படமாட்டார்கள்.

7. குறைந்தபட்சம் 500 தொழிலாளர்களை கொண்டு பாதுகாப்புப் பணி செய்து வரும் நிறுவனமாக இருத்தல் வேண்டும். கடந்த 3 ஆண்டுகளில் ஆண்டு ஒன்றுக்கு 5 கோடி ரூபாய்க்கு குறையாமல் வரவு செலவு (Annual Turnover) செய்து வரும் நிறுவனமாக இருத்தல் வேண்டும். (சான்றுகள் இணைக்கப்பட வேண்டும்) ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்பவர்கள் நிலையான முகவரி சான்று கொடுத்து ஒப்பந்தப்புள்ளியில் கலந்துக் கொள்ள வேண்டும்.

8. இத்திருக்கோயிலுக்கு பாக்கி செலுத்த வேண்டியவர்களோ, ஏற்கெனவே இத்திருக்கோயிலில் பொது/ஏலம் ஒப்பந்தப்புள்ளி எடுத்து நிபந்தனைகளின்படி நடக்க தவறியவர்களோ இந்த ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படமாட்டார்கள்.

9. முதல் உறையில் வரைவோலையுடன் ஒப்பந்தக்காராது தகுதி விவரங்களை வைத்து மூடி முத்திரையிட்டும், (Technical bid) என்று குறிப்பிட்டும் ,இரண்டாவது உறையில் விலை விகிதம் குறிப்பிட்டும் மூடி முத்திரையிட்டும் (Financial bid) இந்த இரண்டு உறைகளையும் வைத்து மூடி முத்திரையிட வேண்டும். முதல் உறையின் மீதும் தகுதிகாண் படிவஉறை (Technical bid) என்றும், இரண்டாவது உறையின் மேல் ‘விலை விகித படிவ உறை’ (Financial bid) என்று குறிப்பிட வேண்டும். இந்த இரண்டு உறைகளையும் பெரிய ஒரு உறையில் வைத்து மூடி முத்திரையிட்டு ‘‘காவல் பணிக்கான ஒப்பந்தப்புள்ளி உறை’’ எனக் குறிப்பிட்டு டெண்டர் பெட்டியில் சேர்க்க வேண்டும்.

10. இரு உறைகள் முறையில் நடத்தப்படும் ஒப்பந்தப்புள்ளியில் ஒப்பந்தப்புள்ளி திறப்பன்று முதலில் தகுதி காண் படிவஉறை (Technical bid) முதலில் திறக்கப்படும். அதனைத் தொடர்ந்து அதில் தகுதியுடைய ஒப்பந்தக்காரரின் விலை விகித படிவங்கள் மட்டுமே (Financial bid) திறக்கப்படும்.

11. ஒப்பந்தப்புள்ளி படிவத்தினை விண்ணப்பதாரர் முழு கையொப்பம் மற்றும் தேதியுடன் அடித்தல், திருத்தலின்றி முழுமையாக பூர்த்தி செய்து ஒப்பந்தப்புள்ளி பெட்டியில் உரிய நேரத்திற்குள்ளாக சேர்ப்பிக்க வேண்டும்.

12. ஒப்பந்தப்புள்ளி கோருபவர்கள், ஒப்பந்தப்புள்ளி படிவத்தில் எந்தவிதமான நிபந்தனைகளோ அல்லது கோரிக்கைகளோ தெரிவிக்கக் கூடாது. மீறினால் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.GST தொகையை தாங்களே செலுத்தி அதன் விபரத்தை தெரிவிக்க வேண்டும்.

13. ஒப்பந்தப்புள்ளி கவரில் தங்களது ( அனுப்புநர்) விலாசத்தை முழுமையாக (செல் நம்பருடன்) குறிப்பிட வேண்டும். ஒப்பந்தப்புள்ளி திறப்பின் போது வந்திருக்கும் ஒப்பந்தப்புள்ளிதாரார்கள் முன்னிலையில் ஒப்பந்தப்புள்ளி பெட்டி திறக்கப்படும், பெயர் அழைக்கப்படும். அப்போது, ஒப்பந்தப்புள்ளி கொடுத்தவர்கள் தனது டெண்டர் டெபாசிட்டுக்கான திருக்கோயிலின் ரசீதின் அசலை சமர்ப்பிக்க வேண்டும். அதன் பிறகே பதிவு செய்து, ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ள ஒப்பந்தப்புள்ளி கொடுத்தவர்கள் மட்டும் அனுமதிக்கப்படுவார்கள். அவ்வாறு டெபாசிட்டுக்கான திருக்கோயிலின் ரசீதின் நகலை சமர்ப்பிக்க தவறுபவர்கள் ஒப்பந்தபுள்ளியில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படமாட்டார்கள்.

14. ஒப்பந்தத்திற்கான விண்ணப்பதாரர் ஒரு நிறுவனமாகவோ ( Proprietorship) பிரைவேட் லிமிடெட், அல்லது பப்ளிக் லிமிடெட் ஆகவோ அல்லது கூட்டு நிறுவனமாகவோ (Firm) இருக்க வேண்டும். வருடம் ஒன்றுக்கு குறைந்த பட்சம் ரூபாய் மூன்று கோடிக்கு குறைவில்லாமல் வரவு – செலவு செய்ததற்கு சான்று கடந்த மூன்று ஆண்டுகளுக்கு இணைக்கப்பட வேண்டும். ISO 9001 – சான்று இணைக்கப்பட வேண்டும்.

15. ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ளும் தனியார் பாதுகாப்பு நிறுவனங்கள் அரசு அங்கீகாரம் அல்லது தமிழக அரசால் தமிழ்நாடு தனியார் பாதுகாப்பு சட்டப்படி PSARA (Private Secuirty Agencies (Regulation) Act 2005 (Central Act 29 of 2005) மற்றும் The Tamilnadu Private Security Agencies Rules 2008) பதிவு செய்யப்பட்டதாக இருக்க வேண்டும். பதிவு செய்ததற்கான சான்றுகள் இணைக்கப்பட வேண்டும். முன் அனுபவச் சான்று இணைக்கப்பட வேண்டும்.

16. ஒப்பந்தப்புள்ளிதாரர் தனது நிறுவனத்தின் நிரந்தர கணக்கு எண் அட்டை (PAN CARD) நகல் இணைக்க வேண்டும்.

17. ஒப்பந்தப்புள்ளி கொடுப்பவர்கள் தன்மேல் நீதிமன்றத்தில் வழக்குத் நிலுவையில் இல்லை என்பதற்கான பிரமாணப்பத்திரம் ஒன்றை சமர்ப்பிக்க வேண்டும். ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ளும் நிறுவனம் நாளது தேதி வரை குற்ற நடவடிக்கை எதிலும் ஈடுபடவில்லை என்பதற்கான காவல்துறை சான்று பெற்றிருக்க வேண்டும்.

18. எந்தவொரு காரணமும் கூறாமல் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ அல்லது ஒப்பந்தப்புள்ளியை நிறுத்தி வைக்கவோ, இணை ஆணையர்/செயல் அலுவலருக்கு அதிகாரம் உண்டு. இதை ஆட்சேபிக்கும் உரிமை ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்பவருக்கு கிடையாது.

19. ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் வேறு பெயர்களுக்கு மாற்றத்தக்கதல்ல.

20. விண்ணப்பதாரரால் தெரிவிக்கப்பட்டிருக்கும் தகவல்கள் உண்மைக்கு புறம்பானவை என தெரிய வருமானால் முன்வைப்புத் தொகை மொத்தமும் பறிமுதல் செய்யப்படுவதுடன் ஒப்பந்தமும் ரத்து செய்யப்படும்.

21. ஒப்பந்தம் உறுதி செய்யப்படும் நிறுவனத்தினரால் பாதுகாப்பு பணிக்கு அமர்த்த படும் நபர்கள் 30 வயது நிரம்பியவர்களாகவும், 45 வயதுக்கு உட்பட்டவர்களாகவும், 170 செ.மீ உயரத்திற்கு குறையாதவர்களாகவும் மார்பளவு 80 செ.மீ - 84 செ.மீக்கு குறையாமல் இருத்தல் வேண்டும். திடகாத்ரமான உடல், ஆரோக்யம் உடையவராக இருத்தல் வேண்டும். திருக்கோயிலுக்கு வருகை தரும் பக்தர்களிடம் கனிவுடன் நடந்து கொள்ள வேண்டும்.

22. ஒப்பந்தப்புள்ளி நிறுவனம் 2014 – 2015, 2015 – 2016, 2016 – 2017 ஆண்டுகளில் ஒப்பந்த அடிப்படையில் காவல் பணி மேற்கொண்டுள்ள நிறுவனங்களின் பட்டியலை இணைக்கு வேண்டும்.

23. வேலைக்கு அமர்த்தப்படும் நபர்கள் திருக்கோயில் பழக்கவழக்கங்களுக்கு கட்டுப்பட்டு வேலை செய்வோம் என்று உறுதிப்பத்திரம் மூலம் உறுதி அளித்திட வேண்டும், வேலை நேரத்தில், மது அருந்தி பீடி, சிகரெட், பான்பராக் போன்ற லாகிரி வஸ்துக்களை உபயோகப்படுத்தகூடாது.

24. ஒப்பந்தப்புள்ளி இந்து சமய அறநிலையச் சட்ட விதிகளுக்கும் ஆணையர் அவர்களின் அங்கீகாரத்திற்கும் உட்பட்டது.

25. ஒப்பந்தக்காரர் கொடுத்த ஒப்பந்தப்புள்ளி ஆணையரால் அங்கீகரிக்கப்பட்ட பின்னர் திருக்கோயில் நிர்வாகத்தால் பிறப்பிக்கப்படும் உத்தரவு நாளிலிருந்து 7 தினங்களுக்குள் தனது சொந்த செலவில் ரூ. 100/-க்கான முத்திரைத்தாளில் ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளை ஏற்று ஒப்பந்தப்பத்திரம் எழுதி கொடுத்து காவல் பணியை துவங்க வேண்டும்.

26. ஒப்பந்தக்காரர் குறிப்பிட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி தொகை ஏற்றுக் கொள்ளப்பட்ட பின்பு வழங்கப்படும் ஒவ்வொரு மாதந்திர பட்டியலிலும் 3% பிடித்த தொகையாக பிடித்தம் செய்து கொள்ளப்படும். இத்தொகையினை ஒப்பந்தக்காலம் முடிவுற்றதும், அவ்வாண்டுக்கான பசலி தணிக்கை அறிக்கை கிடைக்கப் பெற்றதும், ஒப்பந்தக்காரருக்கு திரும்ப வட்டியின்றி வழங்கப்படும்.

27. ஒப்பந்தக்காரர்களால் நியமிக்கப்படும் பாதுகாவலர்கள், பணி இடத்தில், திருக்கோயில் நிர்வாகம் வழங்கும் உத்தரவுக்கு கட்டுபட்டு பணி செய்ய வேண்டும்.

28. ஒப்பந்தக்காரரால் நியமிக்கப்படும் பாதுகாவலர்களின் பணி குறித்து புகாருக்கு இடமின்றி திருக்கோயில் கண்காணிப்பு அலுவலர்கள் நற்சான்று அளிக்கப்பட்டால் தான் ஒவ்வொரு மாதமும் பணி செய்ததற்கான தொகை வழங்கப்படும்.

29. பாதுகாப்பு பணியில் பணிபுரியும் பாதுகாவலர்களின் எண்ணிக்கையை கூட்டவோ, குறைக்கவோ நிர்வாகத்திற்கு அதிகாரம் உண்டு. குறைத்தால் ஒப்பந்த தொகையில் குறைக்கப்பட்ட காவலர்களுக்குத் தக்கவாறு ஊதியம் குறைத்து வழங்கப்படும், அதிகப்படுத்தினால் அதிகப்படுத்தப்பட்ட காவலர்களுக்குத் தக்கவாறு தொகை கூடுதலாக வழங்கப்படும்.

30. நிபந்தனைகளை மீறினாலோ, பின்பற்ற தவறினாலோ அல்லது பணியினை சரிவர செய்யாவிட்டாலோ, ஒப்பந்தக்காரருக்கு எவ்வித காரணமும் கூறாமல் ஒப்பந்தத்தை ரத்து செய்திட திருக்கோயில் நிர்வாகத்திற்கு அதிகாரமுண்டு. ஒப்பந்தத்தார் நிபந்தனைப்படி நடக்கவில்லை எனக் கருதினால், மீறிய ஷரத்துக்கு தகுந்தவாறு அபராதம் விதிக்க திருக்கோயில் நிர்வாகத்திற்கு உரிமையுண்டு.

31. ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகள் மீறப்பட்டால் பாதுகாப்பு பணிக்கான ஒப்பந்தம் ரத்து செய்யப்பட்டு மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்படும். காப்புத் தொகையாக செலுத்திய தொகையை பறிமுதல் செய்யப்படும். மறு ஒப்பந்தப்புள்ளி மூலம் லாபம் ஏற்பட்டால் முன் ஒப்பந்தக்காரருக்கு எவ்வித பாத்தியமும் கிடையாது. இழப்பு ஏற்பட்டாலும் அதற்காக வழக்குத் தொடர நேரிட்டாலும் வழக்கு செலவுகளையும் வேறு இழப்புகள் இருந்தால் அவைகளையும் முன் ஒப்பந்தக்காரரிடம் வசூல் செய்யப்படும்.

32. பாதுகாப்பு பணியில் உள்ள பணியாளர்களுக்கு சிறிய பாதுகாப்பு கருவிகள் ஒப்பந்தகாரர் தனது சொந்தப் பொறுப்பில் ஏற்பாடு செய்து வழங்க வேண்டும். அதற்கென தனியாக தொகை ஏதும் திருக்கோயிலிருந்து வழங்கப்படமாட்டாது. காவல் பணிக்கு வருகிற காவலர்கள் பணிக்கு வரும் பொழுதும், பணி முடிந்து செல்லும் போதும் திருக்கோயிலில் பொறுத்தப்பட்டுள்ள பயோமெட்ரிக் இயந்திரத்தில் கைரேகை பதிவு செய்ய வேண்டும்.

33. காவல் பணிக்கு வருபவர்களுக்கு ஒப்பந்தக்காரர் சொந்தப் பொறுப்பில் தங்குமிடம் ஏற்பாடு செய்து கொடுக்க வேண்டும். அதற்கு திருக்கோயில் இடத்தை பயன்படுத்தினால் திருக்கோயிலுக்கு அதற்கான கட்டணம் செலுத்த வேண்டும்.

34. பாதுகாப்பு காவலர், தீயணைப்பு கருவி ( Fire Extinguisher ) இயக்கத் தெரிந்தவராக இருத்தல் வேண்டும்.

35. பணிக்கு வரும் பொழுது முடி சீராக வெட்டியும், முகச் சவரம் செய்தும் வர வேண்டும்.

36. திருக்கோயில் சொத்துக்கள் காணாமல் போனாலோ, திருடப்பட்டாலோ, ஒப்பந்த நிறுவனம் விசாரணைக்கு உரிய ஒத்துழைப்பு நல்க வேண்டும். காவல்துறைக்கு புகார் அளித்து இழந்த பொருட்களை மீட்க நடவடிக்கை எடுக்க வேண்டும். பாதுகாவலரின் கவனக்குறைவால் இழப்புகள் ஏற்படுமாயின் ஒப்பந்த நிறுவனம் பொறுப்பு ஆகும். காணாமல் போன பொருட்களின் மதிப்பு ஒப்பந்த நிறுவனத்திற்கு வழங்கப்படும் தொகையிலிருந்து பிடித்தம் செய்யப்படும்.

37. திருக்கோயில் பாதுகாப்பு பணியில் இருக்கும் பணியாளர்களுக்கும், திருக்கோயில் நிர்வாகத்திற்கும் எவ்வித தொடர்பும் இல்லை, அனைத்து மத்திய, மாநில சட்டம் மற்றும் விதிகளுக்கும் கட்டுப்பாடுகளுக்கும் ஒப்பந்த நிறுவனமே காவல் பணியாளர்களுக்கு பொறுப்பாகும்.

38. மாதாந்திர வருகைப் பதிவேடு ஒப்புகை அளிக்கப்படும் போது பாதுகாப்பு பணியில் குறைபாடுகளை கருத்தில் கொண்டு அதற்கு ஏற்ற வகையில் தண்டம் (அபராதம்) விதிக்க திருக்கோயில் நிர்வாகத்திற்கு அதிகாரமுண்டு.

39. பாதுகாப்பு பணிக்கு தேவையான மின்னணு உபகரணங்கள் (Electronic Equipments) மெட்டல் டிடெக்டா போன்றவைகளை இயக்குவதற்கு தெரிந்த நபர்கள் குறைந்த பட்சம் பத்து நபர்கள் பணிக்கு அமர்த்தப்பட வேண்டும். இவர்கள் நிலவுக்கால் வடிவ வெடிகுண்டு அறியும் கருவி (Door frame Metal Detector & Metal Detector) இயக்கவும் கண்காணிக்கவும் தெரிந்திருக்க வேண்டும்.

40. நடப்பு ஒப்பந்தக் காலத்தில் முதல் மாதம் நீங்கலாக அடுத்து வரும் மாதங்களில் பட்டியலுடன் முந்தைய மாத வேலையாட்களின் கணக்கில் தொழிலாளர் சேமநல நிதி (EPF) மற்றும் தொழிலாளர் மருத்துவ காப்பீடு (ESI) தொகை சந்தா செலுத்திய இரசீது குறிப்பிட வேண்டும். அவ்வாறு வரப்பெறாத பட்டியல்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டாது.

41. பாதுகாப்பு நிறுவனத்தின் பணி திருப்திகரமாக இல்லையெனில், ஒப்பந்தத்தை இரத்து செய்ய இணை ஆணையர்/செயல் அலுவலருக்கு பூரண உரிமையுண்டு. பாதுகாப்புப் பணியில் கவனக்குறைவாக இருக்கும் காவலர்கள் மற்றும் காவலர்களின் நடத்தையில் நிர்வாகத்தால் குறை கண்டறியும் பட்சத்தில் அவர்களை இத்திருக்கோயில் பாதுகாப்புப் பணியிலிருந்து பாதுகாப்பு நிறுவனம் நீக்கிவிட வேண்டும். பணிக்குறைபாடுகள் கண்டறியப்பட்டால் அதற்கு அபராதம் விதிக்க இணை ஆணையர்/செயல் அலுவலருக்கு பூரண அதிகாரம் உண்டு.

42. பாதுகாப்பு பணிக்கு தங்களது சொந்தப் பொறுப்பில் இந்து சமயத்தைச் சார்ந்த பணியாட்களை மட்டும் நியமிக்க வேண்டும்.

43. பாதுகாப்பு பணிக்கு பயன்படுத்தப்படும் காவலர்கள் ஒரே மாதிரியான திருக்கோயில் நிர்வாகம் நிர்ணயிக்கும், நிறத்தில் சீருடை அணிந்து பணிபுரிய வேண்டும். சலவைப்படி எதுவும் வழங்கப்படமாட்டாது.

44. திருக்கோயில் நிர்வாகத்தால் அங்கீகரிக்கப்பட்ட அடையாள அட்டை பெயர் அடையாளம் (Name Badge) அணிந்திருக்க வேண்டும், சீருடை, அடையாள அட்டை இல்லாத பாதுகாப்பு பணியாளருக்கு ஊதியத்தில் ஒருநாள் ஊதிய அளவிற்கு ஒப்பந்ததாரரின் பட்டியலில் பிடித்தம் செய்யப்படும்.

45. ஒப்பந்ததாரர் பாதுகாப்பு பணிக்கு நியமிக்கும் நபர்களின் எண்ணிக்கை மற்றும் பணியாளர்களின் இரண்டு புகைப்படங்கள், அவர்களின் முழு முகவரி, ஆட்குறிப்பு ( Bio Data), இந்த மதத்தைச் சேர்ந்தவர் என்பதற்கான ஆதராம் ஆகியவற்றை நிர்வாகத்திடம் வழங்கி திருக்கோயில் நிர்வாகத்தால் அனுமதிக்கப்பட்டவர்களை மட்டுமே பணிக்கு வைத்துக் கொள்ள வேண்டும்.

46. பாதுகாவலர் பணியில் இருக்கும் பாதுகாவலர்கள் பக்தர்களிடம் கண்ணியமான முறையில் நடந்துக் கொள்ள பயிற்சி அளிக்க வேண்டியது பாதுகாப்பு நிறுவனத்தின் முக்கியப் பொறுப்பாகும்.

47. பாதுகாப்பு பணி மேற்கொள்ளும் நிறுவனம் தமிழ்நாடு மற்றும் அரசு தொழிலாளர் நல சட்டவிதிகளை பின்பற்ற வேண்டும். தவறும் பட்சத்தில் பாதுகாப்பு நிறுவனமே அதற்கு பொறுப்பாகும்.

48. ஒப்பந்தப்புள்ளி தகுதிகான் அறிக்கையினை பக்க வாரியாக (Page) அட்டவணையிட்டு பொருளடக்கத்தில் (Index) தெரிவிக்க வேண்டும்.

49. திருக்கோயில் ஒரு நிறுவனம் அல்ல எனினும் காவல் பணிக்கு நபர்களை அனுப்பும் நிறுவனம் குறைந்தபட்ச ஊதிய சட்டத்தின்படி (Minimum Wages Act) அதற்கு குறையாமல் மாத ஊதியம் வழங்க வேண்டும்.

50. வேறு நிபந்தனைகள் இருந்தால் ஒப்பந்தப்புள்ளிகள் திறப்பு நேரத்தில் தெரிவிக்கப்படும்.

51. ஒப்பந்தப்புள்ளி கொடுக்கும் நிறுவனம் குறிப்பிடும் விலைப்புள்ளி தொகைக்கு விரிவான குறிப்பு (Break – up Details) ஒன்றை இணைக்க வேண்டும்.

52. காவல் பணிக்கு உள்ளூர் நபர்களை பணியில் அமர்த்தக் கூடாது.

53. திருக்கோயிலுக்கு வருகை புரியும் சேவார்த்திகளை தனிப்பட்ட முறையில் தரிசனத்திற்கு கண்டிப்பாக அழைத்துச் செல்லக் கூடாது. திருக்கோயிலுக்கு வரும் பக்தர்களிடம் இனாம் ஏதும் பெறக்கூடாது.

54. குறைந்தபட்சம் 300 தொழிலாளர்களை கொண்டு பாதுகாப்புப் பணி செய்து வரும் நிறுவனமாக இருத்தல் வேண்டும்.

55. பணியாளர்களுக்கு நாளது தேதிவரை சேமநல நிதி (E.P.F), தொழிலாளர் மருத்துவ காப்பீட்டு (E.S.I) தொகை மற்றும் சேவை வரி (Upto date Clearance Certificater from EPF, ESI & Service Tax) சலுத்தி வருவதற்கான சான்றுகள் அளிக்கப்பட வேண்டும். (குறைந்தபட்சம் கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு செலுத்திய ரசீதுகள் இணைக்க வேண்டும்).

56. ஒப்பந்தப்புள்ளி அளிக்கும் நிறுவனம் குறைந்தபட்சம் 3 ஆண்டுகள் அரசு துறைகள், பொதுத்துறை நிறுவனங்கள், வங்கிகள், கோயில்கள், கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றில் ஏதேனும் இரண்டு நிறுவனங்களில் ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றி இருக்க வேண்டும். (சான்று இணைக்கப்பட வேண்டும்).

57. ஒப்பந்தப்புள்ளி அளிக்கும் நிறுவனம் தற்போது சேவை செய்துவரும் நிறுவனங்களிடமிருந்து சிறப்பான முறையில் பணிபுரிந்து வருவதற்கான சான்றினை (Performances Feedback Certificate from the organizations ) இணைக்க வேண்டும்.

58. ஒப்பந்தபுள்ளி நிறுவனம் தற்போது கையாண்டு வரும் பாதுகாப்பு கருவிகள் குறித்த பட்டியல் விபரம் இணைக்கப்பட வேண்டும்.

59. பணியில் அமர்த்தப்படும் பணியாளர்களுக்கு வங்கி கணக்குகள் துவக்கி பிரதி மாதம் 5ம் தேதிக்குள் அவர்களுக்குரிய சம்பளத் தொகையை செலுத்தி விட்டு, அதன் விவரத்தை பட்டியல் தொகையுடன்

இணைத்து திருக்கோயில் அலுவலகத்தில் கொடுத்த பின்பே ஒப்பந்தப்புள்ளி தொகை காசோலையாக வழங்கப்படும்.

**60.** திருக்கோயிலில் திருவிழா காலங்களான தைப்பூசம், பூச்சொரிதல், தேர் திருவிழா மற்றும் பஞ்சப்பிரகாரத் திருவிழாக்களின்போது திருக்கோயில் நிர்வாகம் தெரிவிக்கும் அளவிற்கு கூடுதலாக பணியாளர்களை பணியில் அமர்த்தி பணி செய்திட தயார் நிலையில் இருந்திட வேண்டும். அதற்கு தனியே பட்டியல் சமர்ப்பித்து தொகை பெற்றுக்கொள்ள அனுமதிக்கப்படும்.

**61.** இந்த ஒப்பந்தப்புள்ளியானது திருச்சி, மாவட்ட நீதிமன்ற ஆளுகைக்கு உட்பட்டதாகும்.

**சி. குமரதுரை,** பி.எஸ்சி.,பி.எல்.,
இணை ஆணையர்/செயல் அலுவலர்/ தக்கார்